செய்தி வெளியீடு எண்:462 நாள்: 17.07.2017

## செய்தி வெளியீடு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 19 வது கூட்டம் 17.07.2017 அன்று காணொளி கலந்துரையாடல் மூலம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிகரெட்டுகள் மீதான மேல்வரியினை (Cess) உயர்த்துவது குறித்து கருத்துரு பரிசீலிக்கப்பட்டது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் விதிக்கப்படும் மேல்வரியானது குறைவாக இருந்த காரணத்தால், சிகரெட் கம்பெனிகள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அமலாக்கத்திற்கு முன்பு செலுத்திய வரியை விட குறைவாக தற்போது வரி செலுத்தும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனை களையும் விதமாக இன்றைய கூட்டத்தில் சிகரெட்டுகள் மீதான மேல்வரியினை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனால் சிகரெட் கம்பெனிகள் தேவையில்லாமல் இலாபம் அடைவது தடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தம்) அவர்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் கீழ் பொருட்கள் மீது நிர்ணயிக்கப்பட்டுள்ள வரிவீதங்களை மாற்றியமைப்பது தொடர்பாக வணிகர்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக அமைப்புகள் ஆகியோரிடமிருந்து வரிவீதங்கள் குறித்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் தொகுக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்காக அனுப்பியுள்ளதைக் குறிப்பிட்டார். அக்கோரிக்கைகளை மீண்டும் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆகஸ்ட் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள 20 வது மன்ற கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டு சுமூகமான முடிவு எட்டப்படும் என மத்திய நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**